செய்தி வெளியீட்டு எண்: 100/2026

நாள்: 19.08.2026

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003

செய்திக்குறிப்பு

தமிழ்நாடு போக்குவரத்து சார்நிலைப் பணியில் (அறிவிக்கை எண்.03/2018, நாள் 14.02.2018) அடங்கிய இயக்கூர்தி ஆய்வாளர், நிலை II (Motor Vehicle Inspector, Grade–II) பதவிக்கான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வானது 01.09.2026 பி.ப முதல் 03.09.2026 மு.ப வரை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை இரயில் நிலையம் அருகில்), சென்னை–600 003–ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மேற்குறிப்பிட்ட மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள், நேரம் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய அழைப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான (www.tnpsc.gov.in) லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படும் தேர்வர்களுக்கு அதற்கான விவரம் **குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (E–mail)** மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்விற்கான அழைப்பாணை தனியே அஞ்சல் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மாண்பமை உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதி மன்ற ஆணையின் படி தேர்வர்கள் / மனுதாரர்கள் / மேல்முறையீட்டாளர்கள் தங்களது புகாரை / குறைகளை உரிய ஆதார ஆவணங்களுடன் மேல்நடவடிக்கைக்காக சமர்ப்பிக்க ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஒருங்கிணைப்பு அலுவலரின் (Nodal Officer) விபரங்கள் கீழ்க்கண்டவாறு:–

திருமதி. ந. வரலட்சுமி,
இணைச் செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் சாலை,
சென்னை–600 003.
தொலைபேசி எண்: 044 – 25300468
தொடர்பு நேரம்: 10.30 AM to 5.30 PM

திரு. பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.
செயலாளர்